Tamil

Private circulation only

# ஐசுவரியவானும் லாசருவும்

# வியாக்கியானம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# இந்த தலைப்பு சம்பந்தமான வேதாகம வசனங்கள்:

---

## லூக்கா 18:18-22

18. அப்பொழுது தலைவன் ஒருவன் அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்தியஜீவனைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான்.

19. அதற்கு இயேசு: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே.

20. விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலைசெய்யாதிருப்பாயாக, களவுசெய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை நீ அறிந்திருக்கிறாயே என்றார்.

21. அதற்கு அவன்: இவைகளையெல்லாம் என் சிறு வயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான்.

22. இயேசு அதைக் கேட்டு: இன்னும்
உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; உனக்கு
உண்டானவைகளையெல்லாம் விற்றுத்
தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது
பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம்
உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா
என்றார்.

---

# லூக்கா 12:16-19

16. அல்லாமலும், ஒரு உவமையை
அவர்களுக்குச் சொன்னார்: ஐசுவரியமுள்ள
ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது.
17. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்?
என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு
இடமில்லையே;
18. நான் ஒன்று செய்வேன், என்
களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி,
எனக்கு விளைந்த தானியத்தையும் என்
பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து,
19. பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக
வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள்
சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி,
புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என்
ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று
தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான்.

20. தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்.

21. தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்.

---

# லூக்கா 16:19-31

19. ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்.

20. லாசரு என்னும் பேர்கொண்ட ஒருதரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து,

21. அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று.

22. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய்

விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான்.

23. பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்.

24. அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்.

25. அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்.

26. அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்.

27. அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு,

28. நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

29. ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவி கொடுக்கட்டும் என்றான்.

30. அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான்.

31. அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார்.

★★★★★

---

*இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:*

**நீங்களோ என்னிடத்தில், அப்படியானால், "பிரசங்கியாரே, பாதாளத்தில் நினைவுகூருதல் உண்டா?" என்று கேட்கலாம். இயேசுவே உண்டு என்று கூறினார்.**

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 58-04-06E உயிர்த்தெழுதலின் சாட்சியம்

---

27. ஓ, இழக்கப்பட்டவர்களுக்கு, அவர்கள் தங்களுடைய ஆக்கினைத்தீர்ப்பை முத்திரையிட்டப் பிறகும், அவர்கள் தங்களுடையக் கடைசி பிரசங்கத்தைக் கேட்டப் பிறகும், ஒரு பிசாசினுடைய நரகத்தில் இருக்கப்போவது, இழக்கப்பட்டு, மனந்திரும்ப வாய்ப்பேயில்லாமல் இருக்கப்போவதும், அவர்கள் புறக்கணித்திருக்கிற சந்தர்ப்பங்களை நினைவுகூருவதும் என்ன ஒரு விசனமுள்ள காரியமாய் இருக்கிறது.

28. நீங்களோ என்னிடத்தில், அப்படியானால், "பிரசங்கியாரே, பாதாளத்தில் நினைவு கூருதல் உண்டா?" என்று கேட்கலாம். இயேசுவே உண்டு என்று கூறினார். அவர் ஐசுவரியவான் தன் கண்களை பாதாளத்திலே ஏறெடுத்துப் பார்த்தபோது, அவன் ஆபிரகாமை

யும், அவருடைய மடியில் லாசருவையும் கண்டான் என்று அவர் கூறினார். "அப்பொழுது அவர், "உன்னுடைய ஜீவியகாலத்தை... நினைத்துப் பார்" என்றார் ஒரு நினைவுகூருதல் உண்டு.

29. இழக்கப்பட்டவர்கள் அறிந்து கொள்ளும்படி பெரிய கூட்டங்களில் அமர்ந் திருந்ததும், தேவனுடைய அபிஷேகிக்கப்பட்ட ஊழியர்களின் வல்லமையான பிரசங்கங்களை கேட்டிருந்ததும், அது மட்டுமின்றி, தேவன் ஜனங்களுக்கு நிகழ்த்தியிருந்த அபிஷேகிக் கப்பட்ட அடையாளங்களையும், அதிசயங்களை யும் காணும்படியிருந்ததும், அதன் பின்னர் இந்த எல்லா எச்சரிப்புக்களையும் நினைவு கூர்ந்து, அதே சமயத்தில் இழக்கப்பட்டிருப்பது எப்படிப்பட்ட ஓர் அச்சந்தருகிறக் காரியமாய் இருக்கும். ஏன், அது அவர்களை என்றென் றைக்குமாய் நினைவூட்டி அலைக்கழிக்கும்.

30. இயேசுவின் மரணத்திற்குப் பிறகு, "அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார், அந்த ஆவிகள் தேவன் நோவாவின் நாட்களில் நீடியப் பொறுமையோடே காத்திருந்தபோது, மனந்திரும்பாமற்போனவை கள்" என்று வேதம் நமக்குச் சொல்லுகிறது. ஒரு மேசியா வரப்போவதாயிருந்தார் என்று சாட்சி பகர்ந்த நோவா, ஏனோக்கு மற்றும் அவர்க ளுடைய நாட்களின் மகத்தான தீர்க்கதரிசி களை அவர்களுடைய நினைவுகூருதலுக்கு கொண்டு வரும்படிக்குச் சென்றார். அவர்கள் அந்தச் செய்தியைப் புறக்கணித்து விட்டிருந்தனர்.

31. இழக்கப்பட்ட என்னுடைய நண்பனே உனக்காக நினைவு கூரும்படியான அந்த நாளில் அது ஒரு பயங்கரமான காரியமாய் இருக்கும். நீ இங்கே மரிக்கும்போது, உன்னுடைய கிரியைகள் உன்னைப் பின் தொடரும். அவைகள் ஒன்று நித்தியத்தினூடாக உன்னை விட்டு ஓயாமல் நினைவுகளில்

அலைக்கழிக்கும் அல்லது நித்தியத்தினூடாக உன்னை ஆசீர்வதிக்கும்.

32. ஆனால் நினைவிருக்கட்டும், இரட்சிக் கப்பட்டிருக்கிறவர்களுக்கோ அது என்ன ஒரு மகத்தான காரியமாய், ஒரு சந்தோஷமாய், உண்மைகளைச் சந்திக்கும்படி நினைவிற்குக் கொண்டு வரக்கூடியதாயும், இன்றிரவு இந்தக் கட்டிடத்தில் இருக்கிற தூதர்களையும், மகத்தான கூட்டங்களையும், மகத்தானநேரங் களையும், நாம் ஒருமித்து அனுபவித்திருந்த மகத்தான சந்தோஷத்தின் நினைவுகூறுதலு மாய் இருக்க வேண்டும். அது இரட்சிக்கப்பட்ட மற்றும் இரட்சிக்கப்படாத இரு குழுவின ருக்குமே முன்னால் உள்ள என்ன ஒரு நேரமாய் இருக்க வேண்டும்!

33. தேவன் ஒரு நல்ல தேவனாயிருக் கிறார். அவர் மிகவும் நீடியப் பொறுமையுள்ளவ ராயிருக்கிறாரே! அவர் மிகுந்த தயவு, சாந்தம், பொறுமை நிறைந்தவராயிருக்கிறாரே! "அவர்

ஒருவரும் கெட்டுப்போகாமலிருக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார்." அவர் மனுஷரை அழிந்துபோவதிலிருந்து விலக்கிக் காத்துக் கொள்ள செய்யப்படக்கூடிய ஒவ்வொரு காரியத்தையும் செய்திருக்கிறார். ஆயினும் அவர்கள் எப்படியாயினும் அழிந்து போவார்கள், ஏனென்றால் அவர்கள் விசுவாசிக்கிறதில்லை.

# என்ன ஒரு பிராண ஆபத்தானத் தவறுதலை அந்த வாலிபன் செய்தான்.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 65-10-31A வழி நடத்தும் தன்மை

75. நாம் தொடர்ந்து போய் அவன் என்ன செய்தான் என்று பார்ப்போம். ஐயம் ஒன்று மில்லை, அவனுக்கு இருந்த மேன்மையோடு, ஒருக்கால் கவர்ச்சியான வாலிபனாக இருக்கலாம். கருத்த மயிர் கீழாக வாரி நல்ல ஆடைகளை அணிந்தவனாய் இருக்கலாம், வாலிபப் பெண்கள், அழகான வாலிபன் என்றால், அவனாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதினர். ஓ அப்படி நினைத்திருப் பார்கள், அவன் ஒரு கால் அவர்களிடத்தில் கையையாட்டி காட்டியிருக்கலாம், அவர்களும் அவனோடு சரசமாடி இருப்பார்கள்.

76. தான் ஒரு பெரிய மனிதன் என்று அவன் தன்னைத் தான் நினைத்தான், பாருங்கள். அவன் கவர்ச்சியாய் இருந்த படியினாலே அவன் வாலிபனாக இருந்த படியினாலே, அவன் பாதையின் முடிவை கீழாக நோக்கி பார்க்காமல் இருந்தால், அவன்

வெறுமனே இங்கே மட்டும் தான் பார்த்தான். நான் வாலிபன் நான் கவர்ச்சியாய் உள்ளேன் நான் ஐசுவரியவான். எனக்கு என்ன தேவை யாய் இருந்தாலும் என்னால் வாங்க முடியும், என்னால் இந்த பெண்களையும் பையன் களையும் எடுத்துக்கொள்ள முடியும், அவர்கள் எல்லாருக்கும் என்னை பிடிக்கும், நான் ஒரு பெரிய மனிதன் என்று அவர்கள் அறிவார்கள், பாருங்கள்.

77. பாருங்கள் இவைகளெல்லாம் அவனிடத்தில் இருந்தது, அவன் அவனுடைய தகப்பனார் செய்யும் படி, சொன்னவைகள் எல்லா காரியங்களையும், அவன் அப்படியே செய்தான். நான் அதிக பக்தியுள்ளவன் நான் சபைக்கு போகிறேன், இப்பொழுது அவன் அதை பின்பற்றி போய் இருக்கலாம், மிகவும் பேர் போனவன், பணக்காரன். புகழ் வாய்ந்தவன் சரியாக இந்த நாளை போன்று, சினிமா நட்சத்திரமோ அல்லது அதைப் போன்று ஏதோவாகவோ உனக்கு சந்தர்ப்பங்கள்

உள்ளது போன்று, இன்றைக்கு சிறு பிள்ளை களில் பெரும்பான்மையோர் அவரிடம் பேசி பாருங்கள், இயேசுவைக் குறித்து அவர்கள் அறிந்திருப்பதை காட்டிலும், அதிகமாக அவர்கள் சினிமா நட்சத்திரங்களை குறித்து அறிந்துள்ளார்கள். பிள்ளைகளாகிய நீங்கள் இயேசுவை குறித்து கற்றுக் கொள்கிறீர்கள், அவர்கள் உட்காருகின்ற இடத்திலே சினிமா நட்சத்திரங்கள் அல்லது வேறு ஏதோ காரியங் களை விளையாட்டாக விளையாடுகிறார்கள். அவர்களுக்கு நடிகர்களையும் அவர்களைக் குறித்த எல்லா காரியங்களையும் அறிவார்கள், அவை எல்லாவற்றையும், அதைக்காட்டிலும் அதிகமாக அறிந்துள்ளார்கள், வேதத்தை குறித்து அவரிடத்தில் சொல்லுங்கள் வேதத்தை குறித்து அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது, பாருங்கள். அதைக் தவறான தெரிந்துகொள் ளுதலை செய்கிறது.

78. இப்பொழுது சில பாடகர்கள் தங்க ளுடைய தேவனால் கொடுக்கப்பட்ட தாலந்தை

புகழுக்காக விற்றுப் போடுகிறார்கள். பின்னர் நாம் அவனை வாழ்க்கையின் கடைசியில் பார்ப்போம், இன்னும் கொஞ்ச தூரம் தொடர்ந்து போய் அவனைப் பார்ப்போம், இந்த வாலிபனை குறித்து வேதம் என்ன சொல்லு கிறது என்று உங்களுக்கு தெரியுமா. அவனும் இன்னும் அதிக வெற்றியைக் கண்டான். ஆகவே சில நேரங்களில் இப்படிப்பட்ட காரியங்கள், நீங்கள் சரியான தெரிந்து கொள்ளுதலை செய்தீர்கள் என்று அர்த்த மல்ல, அவன் என்ன செய்தான் என்று உங்களுக்கு தெரியுமா, அவன் வெளியே போய் தன் இஷ்டப்படியாய் செய்தான், பெரிய விருந்துகளை செய்தான், அவன் அதிகமான பணத்தையும் பெண்கள் மற்ற காரியங்கள் மேல் செலவு செய்தான், பின்னர் அவன் திருமணம் செய்துகொண்டு ஒருக்கால் ஒரு குடும்பம் அவனுக்கு இருந்திருக்கலாம். அவன் புதிய களஞ்சியங்களையும், மற்ற கட்டிடங்களையும் கட்டும் படிக்கு அவன் ஐசுவரியம் அவ்வளவு

மிகுதியாய் ஆனது. அவன் சொன்னான், “நீங்கள் பாருங்கள் நான் இயேசுவைப் பின்பற்றி போகவில்லை, என்னிடத்தில் எனக்கு என்ன உண்டு என்று பாருங்கள்” என்றான்.

79. ஜனங்கள் அப்படி சொல்வதை நீங்கள் கேட்டிருக்கலாம் நான் கேட்டிருக்கிறேன், பாருங்கள். அவர் என்னை ஆசீர்வதித்திருக் கிறார். அதனுடைய அர்த்தம் அதுவல்ல புரிகின் றதா, கொஞ்ச காலம் கழித்து அவனுடைய களஞ்சியங்கள் எல்லாம் மிகுதியாய் வழியத் தொடங்கின, அவன் ஆத்துமாவே உன்னுடைய இளைப்பாறுதலை எடுத்துக்கொள், என்னிடம் அவ்வளவு பணமும் அவ்வளவு வெற்றியும் இருக்கிறது, நான் அவ்வளவு பெரிய ஒரு மனிதன், எல்லா கிளப்புகளிலும் (Club) எனக்கு பங்கு உண்டு, உலகத்தின் ஐசுவரியங் கள் என் கரங்களில் இருக்கின்றது. மிகுதியான நிலங்களும், மிகுதியான பணமும் எனக்கு சொந்தம், நான் ஒரு நல்ல அருமையான மனிதன் என்ன எல்லாருக்கும் என்னை

பிடிக்கும், ஆனால் உங்களுக்குத் தெரியுமா வேதம் அது சொல்லுகிறது. அந்த இரவு, "தேவன் அவனிடத்தில், நான் உன் ஆத்துமாவை எடுக்கப் போகிறேன்" என்று சொன்னார்.

80. பின்னர் என்ன நடந்தது, அங்கே ஒரு பிச்சைக்காரன் இருந்தான், ஒரு ஏழையான வயதான கிழவன் அவனுடைய வெளி வாசலில் கிடந்தான். அங்கு எங்கோ அந்த எருசலேமிலே, அவர்கள் அங்கே வீட்டின் மாடியிலே சாப்பிட்டார்கள். அந்த விதமான ரொட்டி துணிக்கைகளும் இறைச்சி துணிக்கைகளும் அவர்கள் அதை கீழே போடும் போது, அவைகள் தரையிலே வந்து விழும், அவைகளை அவர்கள் திரும்ப எடுப்பதில்லை ஏனென்றால் எருசலேமில் உள்ள எல்லாம், அந்தப் பழைய பட்டினம் அது, ஒரு சிறு காரியம் ஆச்சரியமாக சொல்வதற்க்கு ஒன்றுமில்லையே அவைகள் (FOP). ரொட்டியின் மீது ஈ, மாமிசத்தின் மீது ஈ, வெண்ணையின் மீது ஈ,

எல்லாவற்றின் மேலும் ஈ, அவைகள் அங்கே வீதிகளிலும் சாக்கடைகளிலும், எல்லா காரியங்களிலும் இருக்கும் அப்படியே உள்ளே பறந்து வந்து அப்படியே சாப்பாட்டின் மேல் உட்காரும். ஆகவே இந்த ஜனங்கள் அவர்களுடைய வீட்டின் மேலேறிகொள்வார்கள், அங்கே சாப்பிடுவார்கள், அப்பொழுது இப்படி மேலும் துணிக்கைகளை பெறுக்கி தள்ளுவார்கள், வீதிகளில் இருக்கும் நாய்கள் அந்த துணிக்கைகளை சாப்பிடும்.

81. அந்த ஏழை வயதான கிறிஸ்தவன் அங்கே வீதியிலே இருந்து, அவனுடைய தட்டிலிருந்தும் படுக்கையில் இருந்தும், அவனுடைய மேஜையிலிருந்தும் துணிக்கைகளை சாப்பிடும்படி அனுமதித்தான். அதன் பின்னர் அவன் உள்ளே வந்தபோது எருசலேமுக்குள்ளாக அவனுக்கு (லாசரு) பருக்கள் உண்டானது அந்தப் பருக்களின் மேல் போட்டு மூடுவதற்கு அவனிடத்தில் ஒன்றுமில்லை அவனுடைய பெயர், லாசரு. அவன் சொஸ்த்தம்

அடையும்படியாக நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கினது. கொஞ்ச காலத்திற்குப் பிறகு உங்களுக்கு தெரியுமா இந்த ஆஸ்தி உள்ள மனிதன், அவன் சுகவீனமானான். எல்லாவித மருந்துகளையும் வாங்கும் படியாக அவனிடம் பணம் உண்டு என்று கண்டான்.

82. எல்லாவிதமான வைத்தியர்களும் அவனுக்கு இருந்தனர், ஆனால் உங்களுக்கு தெரியுமா சில நேரங்களில் வைத்தியர்களால் நமக்கு உதவி செய்ய முடியாமல் போய்விடும். மருந்துகள் நமக்கு உதவி செய்ய முடியாமல் போகும். ஒன்றும் நமக்கு உதவி செய்ய முடியாமல் போகும், நாம் தேவனுடைய இரக்கத்தைதான் நம்பி இருக்கின்றோம். அவன் தன்னுடைய பாதையின் முடிவுக்கு வந்தான். வைத்தியர்களால் அவனுக்கு உதவி செய்ய முடியவில்லை. நர்சுகளால் உனக்கு உதவி செய்ய முடியவில்லை. மருந்தினால் அவனுக்கு உதவி செய்ய முடியவில்லை. இன்று அவன் மரித்தான். அவனுடைய ஆத்துமா

அப்படியே சரீரத்தை விட்டு வெளியேறின பிறகு, பாருங்கள்.

83. அது அவனுடைய எல்லா பணத்தையும், அவனுடைய எல்லா கல்வியையும், அவனுக் கிருந்த எல்லா காரியங்களையும் அவனுடைய எல்லா புகழையும் இங்கே விட்டு சென்றது. அவர்கள் அவனுக்கு மகா பெரிய ஒரு அடக்க ஆராதனை செய்தார்கள். ஒருக்கால் கொடி யானது அரைக்கம்பத்தில் பறந்திருக்கலாம். அந்த பட்டினத்தின் மேயர் அங்கு வந்து இருக்கலாம், போதகர்கள் வந்திருக்கலாம், நம்முடைய சகோதரன் இப்பொழுது மகிமைக் குள்ளாக போயிருக்கிறார் என்று சொல்லி இருப்பார்கள். ஆனால் வேதம் என்ன சொல்லு கிறது என்றால், அவன் பாதாளத்திலே வேதனையில் தன் கண்களை ஏறெடுக்கும் போது, அந்த ஆழிற்கு (பெரும்பிளப்புக்கு) அப்புறமாக அவன் தூரத்தில் நோக்கி பார்த்த பிறகு வாசலண்டையிலே பருக்களால் நிறைந்த அந்த பிச்சைக்காரனை கண்டான். அங்கே

பரலோகத்திலே கண்டான், அவன் சத்த மிட்டான், கொஞ்சம் தண்ணீரோடு கூட லாசருவை இங்கே அனுப்புங்கள் இந்த அக்கினி தழல் எனக்கு வேதனையை கொடுக்கிறது என்று சத்தமிட்டான். ஓ முடியாது என்று சொல்லப்பட்டது, பாருங்கள்.

84. அவன் ஜீவியத்தில் அவன் தவறான தெரிந்து கொள்ளுதலை செய்தான், புரிகின்றதா. அவனுடைய ஜீவியத்தில் இருந்து வெளியே போகும் படியான பாதையின் இறுதிக்கு அவன் வந்தபோது, அவன் மார்க்கத்தால் அவன் வழி நடத்த பட்டவனாய் இருந்தான். அவன் கல்வி யினால் வழி நடத்த பட்டவனாய் இருந்தான். அவனுடைய வெற்றியின் செல்வாக்கிலே வழி நடத்த பட்டவனாய் இருந்தான். ஆனால் நீங்கள் பாருங்கள் அவன் கரம் நீட்டி பற்றிக்கொள்ள அவனுக்கு அங்கே ஒன்றும் இல்லை. அந்தக் காரியங்கள் யாவும் அங்கு முடிவடைந்து விட்டது. உங்களுக்கு புரிகின்றதா. சின்ன பையன்களே, முதியவர்களே நான் என்ன

சொல்லுகிறேன் என்று உங்களுக்கு புரிகின் றதா. அவனைப் பிடித்து தாங்கத்தக்கதாக அவனுக்கு அங்கே ஒன்றும் இல்லை. அவ னுடைய பணத்தினால் அவனைத் தாங்க முடியவில்லை, வைத்தியரோடு உள்ள அவ னுடைய நண்பர்களால் அவனைத் தாங்க முடியவில்லை, மருந்தினால் அவனைத் தாங்க முடியவில்லை. அவனுடைய ஆசாரியன் அவனுடைய மார்க்கம் அவனைத் தாங்க முடிய வில்லை. ஆகவே அவன் செய்யக்கூடியதாய் இருந்ததெல்லாம் ஒரே காரியம்தான். நித்திய ஜீவனாகிய அந்த இயேசுவை அவன் ஏற்றுக் கொள்ள மறுத்தான்.

85. ஆகவே அவன் என்ன செய்ய வேண்டி இருந்தது, பாதாளத்தில் அவன் மரணத்தில் அமிழ்ந்து போக வேண்டிஇருந்தது. என்ன ஒரு பிராண ஆபத்தானத் தவறுதலை அந்த வாலிபன் செய்தான். அவன் இயேசுவை ஏற்றுக் கொள்ள, இயேசுவினால் வழிநடத்தப்பட எப்பொழுது மறுத்தானோ, அவன் அப்பொழுதே

அதை மறுத்தான். இன்றைக்கு அநேக வாலிப ஜனங்கள் அந்தத் தவறைதான் செய்கிறார்கள். கர்த்தராகிய இயேசுவினால் வழிநடத்தப்பட மறுக்கிறார்கள். நித்திய ஜீவனை மறுக்கின்றதும் இயேசுவினால் வழி நடத்தப்படுவதை மறுக்கின்றதும், வந்து என்னை பின்பற்றி வா என்று அவர் சொன்ன போது மறுத்ததும். என்னே ஒரு பிராண ஆபத்தான காரியம் என்று நாம் இப்பொழுது கண்டோம்.

**இயேசுதாமே, "ஒரு பெரும் பிளவு இருந்தது என்றும், ஒரு மனிதன் மரித்து, நரகத்திற்கு சென்றுவிடும்போது, அவன் (ஒருபோதும்) பரலோகத்திற்கு வரவே முடியாது. எந்த மனிதனுமே அதை எப்போதுமே கடந்ததில்லையென்றும், ஒருபோதும் அதை கடக்கவே முடியாது" என்றும் கூறினார், என்னைப் பொறுத்தமட்டில் அதுவே இதற்கு தீர்வாகிறது.**

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 64-03-21E அடையாளத்தின் சத்தம்

---

20. ஒவ்வொரு சுகவீனத்திற்கும், ஒவ்வொரு இதயவலிக்கும், ஒவ்வொரு மரணத்திற்கும், ஒவ்வொரு தொல்லைக்கும், ஒவ்வொரு துக்கத்திற்கும், இந்த வலிப்பு வாதத்திற் குட்பட்ட சிறு பிள்ளைக்கும், இந்த எல்லா காரியங்களுக்கும், முடவர்களுக்கும், குருட்டிற்கும், ஒவ்வொரு மருத்துவமனை கட்டப்படுவதற்கும் காரணம் என்னவென்பதை சற்று சிந்தித்துப் பார்த்தீர்களா? காரணமென்ன வெனில் ஒரு நபர் வார்த்தையின் ஒரு சிறு பாகத்தை சற்று அவிசுவாசித்தார். அது ஏவாளாயிருந்தது. சாத்தான் அதை அவளுக்கு மேற்சாயமாக பூசினான். மேற்சாயமாக பூசினானேயல்லாமல் அதை அவளுக்கு மேற்கோளாக காட்டவில்லை. "நிச்சயமாகவே ... கர்த்தர் மிகவும் நல்லவராக இருக்கிறார்" என்றான்,

21. இன்றைக்கு நீங்கள் அதைக் குறித்து மிகவும் அதிகமாகவே கேள்விப்படுகிறீர்கள். தேவன் ஒரு நல்ல தேவனா கவே இருக்கிறார். அவர் ஒரு நல்ல தேவனாக இருக்கிறார். ஆனால் அவர் ஒரு பரிசுத்தத்தின் தேவனாயும், பாவத்தை கண்டுகொள்ளாமல் விடமுடியாத ஒரு தேவனாயுமிருக்கிறார். ஏனென்றால் அதற்கான அபாரதம் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே அவருடைய அடிப்படை ஆதாரங்களின் பேரில் நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் ஒரு கோபாக்கினையின் தேவனாய், ஒரு உக்கிர கோபாக்கினையின் தேவனாயிருக்கிறார் என்பது நினைவிருக் கட்டும். நீங்கள் ஒரு கோபாக்கினையின் தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டும். வெறுமெனே நன்மையும் இரக்கமுமான ஒரு தேவனுக்கு முன்பாக அல்ல, இன்றிரவு அவர் உங்களுடைய இரட்சகராக இருக்கிறார். ஆனால் அந்நாளில் அவர் உங்களுடைய நியாயாதிபதியாயிருப்பார்.

22. ஆகையால் நண்பனே, நீ ஒரு காரியத்தைச் செய்யாமல் விட்டுவிடாதபடி நிச்சயமுடையவனாயிரு. அது - அது ....... அது பலனளிக்காது. வெறுமனே ஒழுங்கற்ற விதமாய் அதனண்டைச் செல்லாதே. நிச்சயமுடையவனாயிரு, இரட்டிப்பான நிச்சயமுடையவனாயிரு, ஏனென்றால் உனக்கு மற்றொரு தருணம் கிடைக்கிறதில்லை. நீ இங்கே பூமியின் மேல் இருக்கும்போது, இதுவே உன்னுடைய தருணமாய் இருக்கிறது.

23. ஐசுவரியவானையும், லாசருவையும் நினைவில் கொள்ளுங்கள். அவனுக்கும் இவனுக்கும் இடையே எந்த மனிதனும் எப்போதும் கடந்திராத அல்லது எப்போதும் கடக்க முடியாதபடியான ஒரு பெரும் பிளவு இருந்தது. புரிகின்றதா? நீங்கள் மரிக்கும் பொழுது, அதுவே இதற்கு தீர்வாகிறது. அந்த இடங்களிலிருந்து அவர்கள் உங்களுக்கு ஜெபிக்கிறார்கள் என்று ஜனங்கள் உரிமை கோருவதை நான் அறிவேன். ஆனால் நீங்கள் அதை ஒருபோதும் நம்பவேண்டாம். அது

தேவனுடைய வார்த்தைக்கு முரணானதாயிருக்கிறது. புரிகின்றதா? "மரமானது எப்பக்கமாக சாய்கிறதோ, சாய்கிறவிதமாகவே, அந்த விதமாகவே அது விழுகிறது". இயேசுதாமே, "ஒரு பெரும் பிளவு இருந்தது என்றும், ஒரு மனிதன் மரித்து, நரகத்திற்கு சென்றுவிடும் போது, அவன் (ஒருபோதும்) பரலோகத்திற்கு வரவே முடியாது. எந்த மனிதனுமே அதை எப்போதுமே கடந்ததில்லையென்றும், ஒருபோதும் அதை கடக்கவே முடியாது" என்றும் கூறினார், என்னைப் பொறுத்தமட்டில் அதுவே இதற்கு தீர்வாகிறது. இயேசு அது இவ்வாறு இருந்தது என்று கூறிவிட்டபோது அதைக் குறித்த யாவும் அவ்வளவுதான்.

24. ஆகையால் சற்று நினைவிருக்கட்டும். இப்பொழுது இது உங்களுடைய தருணமாயிருக்கிறது. இன்றிரவு இது உங்களுடைய கடைசி தருணமாயிருக்கலாம்.

**பெரும் பிளவு என்பதற்கு ஆங்கிலத்தில் great gulf என்ற வார்த்தைகள் உபயோகிக்கப்பட்டுள்ளன.**

## பெரும் பிளவு = **great gulf**

---

பெரும் பிளவு = great gulf

**பெரும் பிளவு** என்பதற்கு ஆங்கிலத்தில் **great gulf** என்ற வார்த்தைகள் உபயோகிக்கப் பட்டுள்ளன.

இதில் **gulf** என்ற வார்த்தைக்கு சில தமிழ் அர்த்தங்கள்:

1. பாதாளப்பள்ளம்

2. கடக்க முடியா இடைப்பள்ளம்

3. நிரம்பாநெடுநீள் பள்ளம்

4. படுகுழி

~~~~~~~~
~~~~~~~~

**லூக்கா 16:26**

26. அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளவு உண்டாக்கப்பட்டிக்கிறது என்றான்.

----------

**Luke 16:26**

26. And beside all this, between us and you there is a great gulf fixed: so that they which would pass from hence to you cannot; neither can they pass to us, that would come from thence.

----------

**ஒரு எரிகின்ற நரகம் இல்லையென்று எண்ணிக் கொள்ளாதீர்கள், ஒரு உண்மையான நரகம் உண்டு. உண்மையாகவே ஒரு பிசாசு உண்டு என்றால், ஒரு உண்மையான நரகம் உண்டு.**

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 57-09-25, **எபிரெயர் நிருபத்தின் பேரிலான கேள்விகளும் பதில்களும் பாகம் - 1**

---

236. நித்தியம், "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்." அங்குதான் உங்கள் காரியமே உள்ளது, நீங்கள் ஒரு விசுவாசியாயிருக்கிறபடியால் நீங்கள் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்கிறீர்கள். ஒரு அவிசுவாசி ஒரு குறிப்பிட்ட கால ஜீவனையே உடையவனாய் இருக்கிறான். நித்தியமான... ஒரு விசுவாசி நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான், அது நித்தியமாயிருக்கிறபடியால் அழிந்து போக முடியாது.

237. ஆனால் ஒரு விசுவாசி, அவன் செல்லுகையில் ஒரு அவிசுவாசி உலகத்தினூடாகச் செல்வான், அவனுக்கு கவலைகளும்,

துயரங்களும் உண்டு; ஒரு மகிழ்ச்சியான நேரத்தை அவன் அனுபவிப்பதாகக் கூறிக் கொள்கிறான், "ஹப்பீ, ஒரு மகிழ்ச்சியான நேரத்தை அனுபவிக்கிறான்." ஸ்திரீகள், மதுபானம், மகிழ்ச்சியான பெரிய நேரம், அவன் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டேயிருப்ப தாக அவன் எண்ணுகிறான். அவன் மரித்து, அவன் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலுக்குள் செல்வான், அங்கே சதாகாலமும் எரிந்து கொண்டேயிருக்கப் போகிறான், ஒரு கால் அவனுடைய ஆத்துமா நூறு கோடி ஆண்டுகள் அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலில் வாதிக்கப்படலாம்.

238. நான்... நீங்களோ, "அது வழக்கமான காணப்படுகிற கந்தகக் கல்லைப் போல இருக்குமா?" என்று கேட்கலாம். அது இதைப் பார்க்கிலும் கோடிக் கணக்கான மடங்கு மோசமானதாயிருக்கும் என்று நான் நினைக்கி றேன். உங்களால் அதை நெருப்பின் மூலம், இப்பொழுதுள்ள அக்கினியைக் கொண்டு

விவரித்துக் கூற முடியாது என்று நான் நினைக்கிறேன். "அக்கினியினால்" என்று அது குறிப்பிடப்பட்டுள்ளதற்கான ஒரே காரணத்தினால், அது நமக்கிருக்கின்ற எல்லாவற்றையும் முற்றிலும் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறது என்பதாகும். அது முற்றிலும் பட்சித்து, ஒவ்வொன்றையும் அழித்து விடுகிறதையே அந்த அக்கினி செய்கிறது. ஆகையால் அது அவ்வண்ணமாய் அங்கு இருக்கும், ஆனால் ஒரு விதமாக தண்டிக்கப்பட்ட வேண்டிய ஒரு ஆத்துமா உங்களுக்கு உண்டு.

239. இப்பொழுது, நீங்கள் அக்கினி என்ற வார்த்தையை கவனிக்க வேண்டும், ஏனென்றால் பரிசுத்த ஆவி என்பதும், "பரிசுத்த ஆவியும் அக்கினியும்" என்றே உபயோகப் படுத்தப்படுகிறது; ஏனென்றால் பரிசுத்த ஆவி பாவத்தை எரித்துப் போடுகிறது, பாருங்கள், சுத்தமாக்குகிறது.

240 ஆனால் அக்கினி, அது நரகத்திலிருந்து வருகிறது, அது ஒரு, "அக்கினிக்

கடல்" என்று கூறப்பட்டுள்ளது. அது என்ன வென்றால், அது ஒரு தண்டனையோடு வாதிக்கப்படுதலாயுள்ளது. ஐஸ்வரியவான் பாதாளத்திலிருந்து தன்னுடைய கண்களை ஏறெடுத்தபோது, “லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும், ஏனென்றால் இந்த அக்கினி ஜீவாலை என்னை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கிறது” என்றான். ஒரு எரிகின்ற நரகம் இல்லையென்று எண்ணிக் கொள்ளா தீர்கள், ஒரு உண்மையான நரகம் உண்டு. உண்மையாகவே ஒரு பிசாசு உண்டு என்றால், ஒரு உண்மையான நரகம் உண்டு.

**அவன் உலகத்திற்கு ஒரு பெரிய மனிதனாக இருக்கலாம். ஆனால் அவன் இயேசு கொடுத்த அந்த முதலீட்டை தள்ளி போட்டதினாலே, "அவன் பாதாளத்திலிருந்து அவன் கண்களை ஏறெடுத்து பார்த்துக் கொண்டிருந்தான்" என்று வேதம் கூறுகிறது.**

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 63-08-03M முதலீடுகள்

---

95. இந்த வாலிபனோ ஆஸ்தியிலே பெருகிக் கொண்டே போனான். ஆனால் கடைசியாக, அவனுடைய முதலீட்டு வருவா யானது திரும்ப பலன் அளிக்கும் நாளானது வந்ததை காண்கிறோம். அவனுடைய பேராசை அதாவது அவனுடைய ஆஸ்தி பெருகினதால் புதிய களஞ்சியங்களை கட்ட வேண்டும் என்று அறிந்திருந்தான். ஓ, அவனுடைய வியாபாரம் பெருகிக் கொண்டே இருந்தது. அவன் சபையிலே அங்கத்தினராக இருந்தான்.

நீங்கள் அதற்கு "அது சரிதான்" ஆம் அது சரிதான் சகோதரனே என்று சொல்லலாம்.

அது சரிதான். அவன் ஒரு சபையிலே அங்கத்தினராக இருந்தார். மற்றும் அவன் ஒரு இரவிலே...

ஆவியிலே எளிமையுள்ள ஒரு மனிதன் இருந்தான். நாம் பணத்திலே மிக எளிமையாய் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நாம் ஆவியிலே எளிமை உள்ளவர்களாய் இருக்க வேண்டும். மத்தேயு 5-ம் அதிகாரத்தில் இயேசு இவ்விதமாக "ஆவியில் எளிமையுள்ளவன் பாக்கியவான் ஏனெனில் இந்த இராஜ்ஜியம் அப்படிப்பட்டவர்களுடையது", என்று சொன்னார். ஸ்தாபனத்தைக் குறித்து அல்ல.

மேலும் அவனுடைய வாசல் அருகே ஆவியில் எளிமையுள்ளவன் ஒருவன் இருந்தான். அவன் அவனுக்கு கொஞ்சம் துணிக்கைகளை கொடுத்தான். இன்னொரு வார்த்தையிலே சொல்ல வேண்டும் என்றால், அவர்கள் கடந்து போகும் போது, அவன் ஒருவேளை அவர்கள் கொண்டிருந்ததான காணிக்கை பெட்டியிலே ஏதாவது ஒன்றை கொடுத்திருப்பான். அல்லது அவன் ஒருவேளை "அவர்கள் எல்லாரும் அருமையான மக்கள்

தான் என்று நீங்கள் அறிவீர்கள். நான் அவர்களுக்கு எதிரியானவன் அல்ல. நான் எப்பொழுதாவது ஒருமுறை அவர்களுடைய காலை கூட்டங்களிலே கலந்து கொள் வதுண்டு" என்று சொல்லியிருக்கலாம். உடனே சில துணிக்கைகளை கொடுப்பீர்கள். அவ்வளவு தான்.

"ஓ ஆம், என்னுடைய மனைவி தான் அந்த கூட்டத்தை சேர்ந்தவள். ஆனால் பாருங்கள் நான் என்னுடைய சக பணியாளர்களோடு வியாபாரத்தில் வகிக்கும் ஸ்தானத்தையே நேசிக்கிறேன்" என்று சொல்லி அந்த துணிக்கைகள் முழுவதையும் கொடுப்பான்.

96. லாசரு ஆவியிலே எளிமையுள்ளவனாக இருந்தான். அவனைப் பார்த்துக்கொள்வதற்கு அவனிடம் போதுமான அளவு மருந்து இல்லா ததினால் நாய்கள் அவனுடைய பருக்களை நக்கும்படி கிடந்தன.

ஆனால் ஒரு இரவிலே அவர்கள் இருவருமே மரித்தனர். அவர்கள் மரித்தபோது, வேதம் இவ்விதமாக கூறுகிறது. ஆவியில் எளிமையாய் இருந்த அவன், தூதர்களால் மரியாதையுடன் ஆபிரகாமுடைய மடியண்டை யில் கொண்டு போகப்பட்டான். இவன் அந்த முதலீட்டை செய்தவன். அவனுடைய நித்திய ஜீவனுக்கான முதலீட்டை அவன் அவர் மேல் செய்திருந்தான். அவன் இந்த உலகத்திலே கொண்டிருந்ததை கொண்டு அவனுடைய ஜீவியத்தை நடத்தவில்லை. அவனுக்கு எந்த பேர் புகழும் இல்லை. அவன் வாசலிலே கிடந்த பிச்சைக்காரனாக இருந்தான். அவனுக்கு ஒன்றும் இல்லாதிருந்தது. அவனுக்கு பணம் இல்லை. அவன் ஒன்றையும் கொண்டிருக்க வில்லை. அவனுக்கு எந்த நண்பர்களும் இல்லை. ஆனாலும் அவன் ஒரு விசுவாசியாக இருந்தான். அவன் தன்னுடைய முதலீட்டை செய்திருந்தான். அவனுடைய பருக்களை நாய்கள் நக்கிக் கொண்டிருக்க தெருவிலே

மரித்தான். அவன் தூதர்களால் ஆபிரகாமின் மடிக்கு கொண்டு போகப்பட்டான் என்று வேதம் கூறுகிறது.

97. அதே இரவிலே அந்த ஐஸ்வரியவனான பெரிய அதிபதியும் மரித்தான். அவன் மிகவும் செழிப்புள்ள ஜீவியத்தை ஜீவித்தான். அவனுடைய லாபபங்கிலிருந்து அவனுக்கு சேர வேண்டியது அவனுக்கு செலுத்தப்பட்டிருந்தது. எப்படியெனில், அவனை அடக்கம் செய்ய அங்கே சில புத்திசாலி பிரசங்கி வந்து அவருடைய சட்டை காலரை மேலேபோட்டு, ஒருவேளை அவருடைய ஆசாரியனின் உடையை உடுத்தி வந்திருப்பார். அவர்கள் கொடியை அரைகம்பு மேலே ஏற்றி, இந்த நடன அரங்கம் முழுவதும் நிரப்புகிற அளவிற்கு பூக்களை கொண்டிருக்கலாம். அவர்கள் "ஓ, நாம் இதை செய்வது எப்பேற்பட்ட மகத்தானதய் இருக்கிறது, ஏனெனில் அவனுடைய வியாபார மும் அவர் செய்தவைகளும் மிக மகத்தானதா

யிருந்தது அல்லவா" என்று சொல்லியிருப்பார் கள். ஒருவேளை அந்த வங்கியின் கழகத்தி லிருந்து அவர்களுடைய மேலாளர் வந்திருக் கலாம். மற்றும் அது போன்றவர்கள் வந்திருக் கலாம். மற்றும் அவனுடைய சவபெட்டியை தூக்கிச் செல்லும்படி பாதுகாவலர்கள் அங்கே இருந்திருக்கலாம்.

அப்போது அந்த புத்திசாலி பிரசங்கி எழும்பி நின்று, "நம்முடைய விலையேறப் பெற்ற சகோ தரன், எத்தனை முறை விதவைகளுக்காக காசோலையை எழுதியிருக்கிறார். எத்தனை முறை நம்முடைய மகத்தான ஸ்தாபனத்திற்கும் நம்முடைய திட்டங்களுக்கும் பண உதவி செலுத்தியிருக்கிறார்" என்றார். ஒருவேளை வியாபாரிகள் எழுந்து பேசியிருக்கலாம். பாருங்கள், இது அவனுடைய வெகுமதியாய் இருக்கிறது. அது சரிதான். அவனுடைய முதலீடு வருவாய் அவனுக்கு இவ்விதமாக திரும்ப அளித்தது. அவன் உலகத்திற்கு ஒரு

பெரிய மனிதனாக இருக்கலாம். ஆனால் அவன் இயேசு கொடுத்த அந்த முதலீட்டை தள்ளி போட்டதினாலே, "அவன் பாதாளத்தி லிருந்து அவன் கண்களை ஏறெடுத்து பார்த்துக் கொண்டிருந்தான்" என்று வேதம் கூறுகிறது. அங்கிருந்து அவன் ஆபிரகாம் மடியிலே பாதுகாப்பாய் சௌகரியமாய் அருமை யாய் சுற்றி நடந்துக் கொண்டிருந்த அந்த முதலீடு செய்த அந்த மனிதனைக கண்டான். உடனே அவன் கதறினான். இப்பொழுது கவனி யுங்கள். அவன் கிறிஸ்தவனா என்று நீங்கள் கேட்கலாம்?

ஆம். அவன் "தகப்பனாகிய ஆபிரகாமே" என்றான். அவன் ஒரு யூதன். அவன் அவரிடத்தில் 'நீர் அந்த முதலீட்டை செய்து அந்த ஆவியில் எளிமையுள்ள லாசருவை அனுப்பும்படி வேண்டுகிறேன். நான் அதை தள்ளிப் போட்டிருந்தேன். ஆனால் லாசருவை கொஞ்சம் தண்ணீரோடு அனுப்பும், இந்த

நெருப்பு என்னை வேதனைப்படுத்துகிறது" என்றான்.

அதற்கு அவர், "மகனே, உனக்கு அந்த தருணம் கொடுக்கப்பட்டது" என்று கூறினார்.

அவனுக்கும் நிச்சயமாகவே கொடுக்கப் பட்டது.

"நீ கொண்டிருக்கிறதை விற்று, உன்னு டைய முதலீட்டை இதிலே செய்து உன் சிலுவையை எடுத்து என்னைப் பின்பற்றி வா" என்று இயேசு சொன்னார்;. அது அவனுக்கு மிக அதிகமாய் இருந்தது. தொடர்ந்து அவர், "இப்பொழுது லாசருவோ சௌகரியமாயிருக் கிறான். நீயோ வேதனைப்படுகிறாய். இவை எல்லாவற்றிற்கு மேல், உனக்கும் அவனுக்கு மிடையே பெரிய பிளவு இருக்கிறது ஒருவனும் இதைக் கடந்து போனதுமில்லை. இனிமேலும் போகப் போவதுமில்லை" என்றார்.

98. இது, மரித்தபின் தன்னுடைய பாவ பரிகாரத்தைச் செய்ய தற்காலிக இடம் இருக்கிறது என்று சொல்லுகிற உபதேசம் எல்லாவற்றையும் அடித்து துண்டு துண்டாக்கும். ஏனெனில் அதைச் சொன்னது இயேசுகிறிஸ்துவே. ஐயா, என்னுடைய விலையேறப்பெற்ற, வழி தவறின என் சகோதரனே, கிறிஸ்துவில இருந்து வழி விலகினவனே, நீங்கள் அதிக நாட்கள் காக்க வேண்டாம்.

இந்த முதலீட்டைச் செய்ய இனி அதிக நாட்கள் காக்க வேண்டாம். வேறொரு நாளில் செய்கிறேனென்று உன்னுடைய உள்நோக்கத்தில் கொண்டிருக்கலாம். ஆனால் அந்த பழைய தெற்கத்திய பழமொழி சொல்லுகிறதைப் போல "பாதாளத்திற்கு வழி நடத்துகிற நல்ல உள்நோக்கங்களும் உண்டு". ஆகவே, உங்களுடைய உள்ளான நோக்கங்கள் எல்லாம் உங்களுக்கு அதைச் செய்யாது. நீங்கள்

குப்பியிலிருக்கும் மருந்துக் குறிப்பை வாசித்து அதன் பின் உங்களுக்கு அது பலன் கொடுக்கும்படி அந்த மருந்தை உபயோகிக்க வேண்டும். உங்களுடைய முதலீட்டைசெய்து, அதன்பின் அவருடைய இரத்தத்தினாலே உங்களுடைய இருதயங்களிலே உங்களுடைய பெயரை கையெழுத்திடுங்கள்.

அவனை பாருங்கள். நரகத்தில் இருந்து கண்களை ஏறெடுத்து பார்த்தான். அது அவனுக்கு கிடைத்த பலன்.

99. பிறகு அவன், "அப்படியானால் தகப்பனாகிய ஆபிரகாமே உம்மால் இதை செய்ய முடியவில்லையென்றாலும் என்னுடைய சக பணியாளர்களையும் விட்டு விடாதேயும். பூமியிலே நான் செய்த என்னுடைய முதலீட்டின் மூலம் நான் சேகரித்த சொத்துக்கள் எல்லாம் அங்கே இருக்கிறது. நான் செய்த அதே தவறை அவர்கள் செய்ய வேண்டாம் என்று அவர் களுக்கு சொல்லுங்கள்" என்றான்.

இந்த காலை வேளையிலே, என்னுடைய யூத நண்பன் அல்லது புறஜாதி நண்பனே, அது நீயாக இருக்கக் கூடாதா? நீங்கள் அந்த பகுத்தறிவற்றவனைப் போல இருக்க வேண்டாம்.

"ஓ, அவனை அங்கே அனுப்பும், இந்த செய்தியானது அவர்களை சென்றடையட்டும்" என்றான். அவன் இப்பொழுதோ ஊழியக்கார னாக இருக்க விரும்பினான். அதை ஏற்றுக் கொள்ள விரும்பினான். ஆனால் அது மிகவும் கால தாமதமாகிவிட்டது. இப்பொழுது அவனால் அதை செய்ய முடியாது. அவனுடைய முதலீட்டை செய்ய அவனுக்கு தருணம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவன் அதை அப்போது செய்யவில்லை.

அதற்கு ஆபிரகாம், "அவர்களுக்கு தீர்க்க தரிசிகள் உண்டு மற்றும் வார்த்தை என்ன சொன்னதோ அதைப் பெற்றிருக்கிறார்கள்.

நியாயபிரமாணங்களை கொண்டிருக்கிறார்கள்" என்றார்.

"ஆம், சரிதான், ஆனால் மரித்தோரி லிருந்து ஒருவன் எழும்பி, அவன் மரித்தோரி லிருந்து உயிரோடு எழுந்தான் என்று நிரூபித்தால், அவர்கள் அப்போது விசுவாசிப் பார்கள்" என்றான்.

அதற்கு அவர், ''மரித்தோரில் இருந்து ஒருவன் எழுந்தாலும் அவர்கள் விசுவாசிக்க மாட்டார்கள்" என்றார்.

100. இப்பொழுது அந்தக் காட்சியானது கடந்து போய் இரண்டாயிரம் வருடங்கள் ஆனது. இந்த 1963-ம் வருடத்திலே, இந்த காலை வேளையிலும் கிறிஸ்து மரித்தோரி லிருந்து உயிரோடெழுந்தார் என்பதை நிரூபிக் கும்படி ஒருவர் நம் மத்தியில இருக்கிறார். அவருக்குள் இருந்த அதே ஜீவனே சபைக்குள் ளுமிருந்து அவருடைய வார்த்தையை நிறை

வேற்றும்படி அதே காரியத்தை செய்து வருகிறது. என் சகோதரனே, என் சகோதரியே, இந்த காலை வேளையிலே நீ அந்த முதலீட்டை செய்யமாட்டாயா? உன்னுடைய ஜீவியத்தை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடு. நம்முடைய தலையை பயபக்தியுடன் தாழ்த்தலாம்.

இந்த வார்த்தைகள் வீணாக போக வேண்டாம். ''நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும்" நீங்கள் பிறந்தேயாக வேண்டும். நீங்கள் கூச்சலிட வேண்டும், சத்தம் போட வேண்டும், அன்னிய பாஷையிலே பேச வேண்டும் என்பதை குறித்துப் பேசவில்லை. நீங்கள் உண்மையிலே உள்ளத்தின் ஆழத்தி லிருந்து பாவங்களை அறிக்கையிட்டு, மறுபடியும் பிறக்க வேண்டுமென்பதைப் பற்றியே பேசுகிறேன். உன்னால் எப்பொழுதுமே அதை செய்ய முடியவில்லை. நீ எப்பொழுதுமே உன்னுடைய ஸ்தாபனத்தையே பிடித்து கொண் டிருக்கிறாய். அவர்கள் வார்த்தைக்கு முரண்

பாடாய் இருக்கிறார்களென்று நீ அறிந்திருந்தும், இன்னும் உன்னுடைய சுய எண்ணத்தின் நிமித்தம், உன்னுடைய பெருமைக்காக, உன்னுடைய புகழுக்காக, நீ அந்த பெரிய சபையிலே தரித்திருக்கிறாய். அங்கே தெரு முனையிலே இருக்கும் சுவிசேஷ குழுவோடு எந்த சம்பந்தமும் கொண்டிருக்க விருப்பமில்லை. பாருங்கள், உன்னுடைய உள்ளம் எங்கேயோ அங்கேதான் உன்னுடைய பொக்கிஷமுமிருக்கும்.

# நாம் அவரை அறிந்துகொள்வோம் என்று நான் விசுவாசிக்கிறேன்.

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: **தேவன் மோசேயிடம் பேசினார்,** 53-0831

---

7. பாதாளத்திலும் கூட நினைவுகள் இருந்தது என்று இயேசு கூறியிருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். அவர் அந்த ஐசுவரியவானைப் பார்த்து, “மகனே, நீ பூமியிலே உயிரோடிருந்த காலத்தை நினைத்துக் கொள்” என்று கூறினார். லாசருவையும் மற்றவர்களையும் குறித்து கூறியிருக்கிறார். எனவே அங்கே பாதாளத்தில் நினைவுகள் இருக்குமானால், நிச்சயமாக பரலோகத்திலும் நினைவுகள் இருக்கும். எனவே, தேவன் நம்மை நினைவுகூர வைப்பார் என்று நான்—நான் விசுவாசிக்கிறேன்.

ஃபன்னி கிராஸ்பி, அவள்... சில குற்றம் கண்டுபிடிப்பவர்கள் உள்ளே வந்து — எவ்வாறு என்று அவளிடம் கூறி, அவள் கிறிஸ்தவ பாடல்களையும் மற்றவைகளையும்

பாடுவதை குறைகூறிக் கொண்டிருந்தார்கள்... உங்களில் அநேகருக்கு ஃபன்னி கிராஸ்பி யைத் தெரியும், அவளைக் குறித்து அறிந்தி ருக்கிறீர்கள், இன்னுஞ் சரியாகச் சொன்னால், அவள் குருடான கவிஞர் பெண்ணாக இருந்தாள்: அவள் உலகத்திற்கு அதனுடைய மிகச்சிறந்த பாடல்களைக் கொடுத்திருக்கி றாள். நான் எப்பொழுதும் பீட அழைப்புகளில் பாடி வருகிற மிகவும் இருதயத்தைத் தொடுகிற பாடலாகிய, "கனிவான இரட்சகரே, என்னைக் கடந்து சென்று விடாதேயும்" என்ற பாடல் அநேகமாக ஃபன்னி கிராஸ்பி னுடையதுதான், மற்றும் இருதயத்தை எளிதாக கிளர்ச்சியூட்டுகிற அந்தப் பாடல்கள் எல்லா வற்றையும் (பாடியிருக்கிறாள்).

ஏதோவொரு சமயத்தில்... ஒருசமயம் அங்கே யாரோஒருவர் கடந்துசென்று, "நீ மறுகரையில் இருந்திருப்பாயானால், நீ... அங்கே அப்படிப்பட்ட ஒரு இடமாக இருந்து... நீ அங்கேயும் குருடாக இருந்திருப்பாயானால்,

நீ எப்பொழுதாவது அவரை எப்படித்தான் அறிந்து கொண்டிருப்பாய்**?**" என்று கேட்டார்.

அதற்கு அவள், "நான் எப்படியும் அவரை அறிந்திருப்பேன்" என்று கூறினாள்.

"நீ அவரை எப்படி அறிந்திருப்பாய் என்று நினைக்கிறாய்**?**" என்று கேட்டார்.

"நான் அவருடைய கரங்களை தடவிப் பார்த்திருப்பேன்" என்றாள். பாருங்கள். அப்போது அவள் திரும்பி, தன்னுடைய நாற்காலிக்கு திரும்பி நடக்கத் துவங்கினபோது, அந்தப் பாடல் வந்தது:

*நான் அவரை அறிந்து கொள்வேன், ஆம், நான் அவரை அறிந்துகொள்வேன்,* **(நீங்கள் அதைக் கேட்டிருக்கிறீர்கள்.)**

*மீட்கப்பட்டு அவர் பக்கத்தில் நான் நிற்பேன்;*

*நான் அவரை அறிந்து கொள்வேன், ஆம், நான் அவரை அறிந்துகொள்வேன்*

*ஆணிகடாவப்பட்ட அவருடைய கைகளில் உள்ள காயத் தழும்புகளினால்.*

**8.** நாம் அவரை அறிந்துகொள்வோம் என்று நான் விசுவாசிக்கிறேன். "நாம் இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை, ஆகிலும் அவருடையதைப் போன்ற ஒரு சரீரத்தை நாம் உடையவர்களாயிருப்போம் என்று அறிந்திருக்கிறோம். அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம்." நல்லது, அது—அதுவே எனக்குப் போதுமானது, அப்படியே அவர் இருக்கிற இடத்தில் இருப்பது. அது—அது சரி.

---

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடப்படும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# மரித்தப் பிறகு எந்த ஒரு நபருக்காகவும் ஜெபிப்பது எந்த ஒரு நன்மையும் செய்கிறதில்லை.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 57-10-02, எபிரெயர் நிருபத்தின் பேரிலான கேள்விகளும் பதில்களும், பாகம் - 2

405. மரமானது சாய்கிறவிதமாகவே, அந்த விதமாகவே அது விழுகிறது. நீங்கள் மரிக்கும் நிலையில்... அந்தக் காரணத்தினால்தான் நான் மரித்தோருக்காக ஜெபிப்பதில் கருத்து வேற்றுமைக் கொள்கிறேன், பாருங்கள், பரிந்துரை பிராத்தனைகள் அல்லது அல்லது மரித்த பரிசுத்தவான்களோடு கலந்துரையாடுதல் போன்றவற்றோடு கருத்து வேறுபாடு கொள்கிறேன். அது தேவனுடைய வார்த்தையின்படியிருக்க முடியாது.

மரித்தப் பிறகு எந்த ஒரு நபருக்காகவும் ஜெபிப்பது எந்த ஒரு நன்மையும் செய்கிறதில்லை. அவர்கள் முடிவுற்றுவிட்டனர். அவர்கள்... அவர்கள்... அவர்கள் இரக்கத்திற்கும் நியாயத்தீர்ப்பிற்குமிடையேயுள்ள கோட்டை கடந்துவிட்டனர். அவர்கள் இரக்கத்

தண்டை சென்றிருக்க வேண்டும் அல்லது இரக்கத்திலிருந்து விலகிச் சென்றிருக்க வேண்டும்.

இயேசு பரிசுத்த மத்தேயு 16-ம் அதி காரத்தில் அவ்வண்ணமாய்க் கூறினார், அவர்-அவர்-அவர் அதைப் போதித்தார்; மாற்கு 16-வது அதிகாரத்தில் அது உள்ளது என்று நான் நினைக்கிறேன். ஐஸ்வரியவானும் லாசருவும். எந்த மனிதனும் இந்தப் பிளவைக் கடந்து வர முடியாது, ஒரு போதும் இதைக் கடப்பதில்லை. அங்குதான் உங்கள் காரியமே உள்ளது. புரிகிறதா? ஆகையால் அதுவே இதனைத் தீர்க்கிறது.

**நான், "அப்பொழுது அவன் அழுதான்" என்பதை எடுத்து வைத்திருந்தேன். நான், "அங்கே பிள்ளைகளே கிடையாது. நிச்சயமாக நரகத்தில் கிடையாது. அப்பொழுது அவன் கதறினான்" என்றேன். மேலும் நான், "அங்கே பூக்கள் ஏதும் இல்லை. அப்பொழுது அவன் கதறினான். அங்கே தேவன் இல்லை. அப்பொழுது அவன் கதறினான். அங்கே கிறிஸ்து இல்லை. அப்பொழுது அவன் சத்தமிட்டான்" என்றேன்.**

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 59-04-19A என் சுயசரிதை

162 நான் ஏறக்குறைய அந்த இரவு முழுவதும் ஜெபித்தேன். நான், "கர்த்தாவே, நான் நுழைந்திருக்கிறேனே இது என்ன? இந்த விதமான பயபக்தியுள்ள ஜனங்களை என் ஜீவியத்தில் நான் கண்டதேயில்லை" என்றேன். நான், "இதெல்லாம் என்னவென்று நான் அறிந்துகொள்ளும்படி எனக்கு உதவி செய்யும்" என்றேன்.

163 அடுத்தநாள் காலையில் நான் அங்கே சென்றேன். எங்களை காலை ஆகாரத்திற்கு அழைத்தார்கள். உண்மையிலேயே நான் அவர்களோடு சாப்பிடச் செல்ல மனதில்லாதிருந்தேன். ஏனென்றால் காணிக்கைப் பெட்டியில் போட என்னிடத்தில் பணம் ஏதும் இல்லாதிருந்தது. நான் வெறுமனே திரும்பிச் சென்றேன். அடுத்த நாள் காலையில் நான் உள்ளே சென்றபொழுது ஏன், (நான் அந்த

தின்பண்டங்கள் சிலவற்றை சாப்பிட்டுவிட்டு), போய் அமர்ந்தேன். அவர்கள் ஒலிபெருக்கியை வைத்திருந்தனர். அதற்கு முன்பாக நான் ஒரு மின்சார ஒலிபெருக்கியை கண்டதேயில்லை. அந்த காரியத்தைக் குறித்து நான் பயந்து போனேன். எனவே அவர்கள்... அது ஏதோ ஒரு கம்பியில் தொங்கிக் கொண்டிருந்தது. அது கீழ்நோக்கி தொங்கிக் கொண்டிருந்தது. தொங்கும் ஒலிபெருக்கிகளில் ஒன்றைப் போன்று இருந்தது. அவர், கடந்த இரவு மேடையின் மேல் அங்கே ஒரு பாப்டிஸ்டு பிரசங்கியார் இருந்தார்" என்றார்.

அப்பொழுது நான், "இப்பொழுது ஏதாவது செய்வது எனக்கு நல்லது" என்று நினைத்தேன்.

164 அவர், "மேடையின் மேல் இருந்ததிலேயே அவர்தான் வாலிபமான பிரசங்கி. அவருடைய பெயர் பிரான்ஹாம். அவர் எங்கே இப்பொழுது இருக்கிறார் என்பதை பற்றி யாருக்காவது தெரியுமா? அவரை வரும்படியாய் சொல்லுங்கள். காலை செய்தியை அவர்

கொண்டுவர நாங்கள் விரும்புகிறோம்" என்று கூறினார்.

165 ஓ, என்னே! நான் ஒரு சிறிய T சட்டையும், பருத்தி நூல் கால்சட்டையும், அணிந்திருந்தேன், உங்களுக்கு தெரியும். பாப்டிஸ்டுகளாகிய நாம் பிரசங்க பீடத்திற்கு போகும்போது ஒரு சூட் அணிய வேண்டும் என்று நினைக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் அப்படியே அமைதியாக உட்கார்ந்திருந்தேன். சரியாக அந்த நேரத்தில் அவர்கள் அந்த கூட்டத்தை அப்பொழுது வடக்கு பாகத்தில் வைத்திருந்தார்கள். ஏனென்றால் அது (அவர்களுடைய சர்வதேச கூட்டம்.) அது தென்பாகத்தில் நடந்திருந்தால் அதில் கறுப்பர்கள் கலந்துகொள்ளக் கூடாமற் போயிருக்கும். அங்கே அவர்களோடு கறுப்பர் கள் இருந்தார்கள். நான் ஒரு தெற்கத்தியன். இருந்தாலும் மற்றவர்களைக் காட்டிலும் நான் மேலானவன் என்ற எண்ணமே எனக்கிருந்தது. நீங்கள் பாருங்கள், எனக்கு அந்த வெற்று

வீராப்பு இருந்தது. பின்னர் அந்த காலையில் ஒரு கறுப்பு மனிதன் என்பக்கத்தில் உட்கார்ந் திருக்க நேர்ந்தது. எனவே நான் உட்கார்ந்து அவரை நோக்கிப் பார்த்தேன். நான், "அவர் ஒரு சகோதரன்" என்றே நினைத்தேன்.

166 அவர், "வில்லியம் பிரான்ஹாம் எங்கே இருக்கிறார் என்று யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டார். நான் இந்த விதமாக என் இருக்கையில் குனிந்து கொண்டேன். அப்பொழுது அவர் இரண்டாவது முறையாக அதை அறிவித்தார். அவர் அந்த சிறிய ஒலிபெருக்கியை இழுத்து, வெளியே இருக்கின்ற யாருக்காவது வில்லியம் பிரான்ஹாம் எங்கே இருக்கிறார் என்று தெரியுமா?" என்று கேட்டார். மேலும், "இன்றைய காலை செய்திக்காக அவர் மேடையின் மீது தேவைப்படுகிறார் என்று அவரிடம் கூறுங்கள். அவர் தெற்கு இந்தியானா விலிருந்து வந்த ஒரு பாப்டிஸ்டு பிரசங்கியார்” என்றார்.

167 நான் அப்படியே அமைதியாக உட்கார்ந்து கீழாக குனிந்து கொண்டேன். உங்களுக்குத் தெரியுமா? எப்படி இருந்தாலும் யாருக்கும் என்னைத் தெரியவில்லை. அந்த கறுப்பு பையன் என்னை உற்றுப்பார்த்து, அவர் எங்கே இருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

168 நான், "ஒன்று நான்-நான் பொய் சொல்ல வேண்டும் அல்லது ஏதாவது காரியம் செய்ய வேண்டும்" என்று நினைத்தேன். எனவே நான், "இங்கேயே உட்கார்ந்திரு" என்றேன்.

அவர், "சரி ஐயா" என்றான்.

நான், “உன்னிடம் ஏதோ காரியத்தை கூற நான் விரும்புகிறேன், நான்-நான், நான்தான் அது” என்றேன்.

அவன், "அப்படியானால் அங்கே மேலே போங்கள்” என்றான்.

169 நான், "இல்லை, என்னால் முடியாது பார்," என்றேன். மேலும் "நான், நான் இந்த பழைய சாதாரண பருத்தி கால்சட்டையையும், இந்த சிறிய T சட்டையும் அணிந்திருக்கிறேன்" என்றேன். எனவே நான், "என்னால் அங்கே மேடைக்கு போகமுடியாது" என்றேன்.

170 அதற்கு அவன், "நீர் எப்படி உடுத்தி யிருக்கிறீர் என்பதைப் பற்றி அந்த ஜனங்கள் கவலைப்படமாட்டார்கள். அங்கே மேலே போங்கள்" என்றான்.

நான், "முடியாது, முடியாது" என்றேன். பின்னர் நான், "அமைதியாய் இரு. ஒன்றையும் நீ இப்பொழுது சொல்லாதே" என்றேன்.

171 அவர்கள் ஒரு நிமிடத்தில் மீண்டும் ஒலிபெருக்கியண்டை வந்து, “வில்லியம் பிரான்ஹாம் எங்கே இருக்கிறார் என்று யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டார்கள்.

172 அவன், “அவர் இங்கே இருக்கிறார். அவர் இங்கே இருக்கிறார், அவர் இங்கே இருக்கிறார்" என்றான். ஓ, என்னே! உங்களுக்

குத் தெரியுமா? அங்கே நான் அந்த சிறிய T சட்டையுடன் எழும்பி நின்றேன். இங்கே நான்.

173 அவர், "திரு. பிரான்ஹாம், மேலே வாரும், நீர் செய்தியை கொண்டுவர நாங்கள் விரும்புகிறோம்" என்றார். ஓ, என்னே! அந்த பிரசங்கிமார்கள் எல்லோர் முன்னிலையிலுமா? உம், அந்த எல்லா ஜனங்களின் முன்னிலை யிலுமா? உங்களுக்குத் தெரியுமா? நான் அப்படியே நழுவி மேலே சென்றேன். என்னுடைய முகம் சிவந்து காதுகள் எரிய துவங்கியது. சாதாரண கால்சட்டையோடும், T சட்டையோடும் பிரசங்கியாராக நான் மேடை மேல் நழுவிச் சென்றேன். நீங்கள் பாருங்கள், இதற்கு முன்னர் கண்டிராத ஒரு மின்சார ஒலிபெருக்கிக்கு முன்னால் பாப்டிஸ்டு பிரசங்கி யார் சென்றார்.

174 நான் அங்கே எழும்பி நின்று, நான், “நல்லது, நான்-நான்-நான் இதைக்குறித்து அறியேன்” என்றேன். உங்களுக்குத் தெரியுமா? உண்மையாகவே பயத்துடன், நான் வார்த்தை யில் தடுமாறிக்கொண்டிருந்தேன் நான் இங்கே

லூக்கா 16-ம் அதிகாரத்தை எடுத்து, நான் நினைத்தேன், "நல்லது இப்பொழுது.." நான் நான் பேசும் பொருளை எடுத்து, அவன் பாதாளத்தில் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து கதறினான்." நான் எனவே உங்களுக்கு தெரியுமா, நான் அதை பிரசங்கிக்கத் தொடங்கினேன். நான் பிரசங்கிக்கையில் சற்று மேலான உணர்வையடைந்தேன். நான், “ஐசுவரியவான் பாதாளத்திலிருந்து கூக்குரலிட்டான்” என்றேன். அந்த மூன்று சிறிய வார்த்தைகள். அதைப்போன்ற அனேக செய்திகள் என்னிடம் உண்டு. உதாரணமாக, "இதை நீ விசுவாசிக்கிறாயா?" "கன்மலையைப் பார்த்துப் பேசு" போன்றவை. எனவே நான் அவைகளை பிரசங்கிக்க நீங்கள் கேட்டிருக்கிறீர்களே. நான், "அப்பொழுது அவன் அழுதான்" என்பதை எடுத்து வைத்திருந்தேன். நான், "அங்கே பிள்ளைகளே கிடையாது. நிச்சயமாக நரகத்தில் கிடையாது. அப்பொழுது அவன் கதறினான்" என்றேன். மேலும் நான், "அங்கே பூக்கள் ஏதும்

இல்லை. அப்பொழுது அவன் கதறினான். அங்கே தேவன் இல்லை. அப்பொழுது அவன் கதறினான். அங்கே கிறிஸ்து இல்லை. அப்பொழுது அவன் சத்தமிட்டான்" என்றேன். பின்னர் நான் சத்தமிட்டேன். ஏதோ காரியம் என்னை பற்றிக் கொண்டது. என்னே, ஓ! என்னே! பிறகு என்ன சம்பவித்தது என்று எனக்கு தெரியாது. பின்னர் நான் என் சுயநினைவுக்கு வந்தபோது நான் வெளிப் பக்கமாக நின்று கொண்டிருந்தேன். அந்த ஜனங்கள் அலறிக்கொண்டும், சத்தமிட்டுக் கொண்டும், அழுதுகொண்டும் இருந்தனர். நான், நாங்கள் ஒரு பயங்கரமான நேரத்தை உடையவர்களாக இருந்தோம்.

**இந்த ஐசுவரியமான இளம் மனிதன் தன்னைத் தானே கிறிஸ்துவுக்கென அளிக்க விரும்பவில்லை, ஆகவே அவன் புறப்பட்டுச் சென்று விட்டான்.**

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 62-01-23 எல்லாவற்றையும் விட்டுவிடுதல்

69. இந்த ஐசுவரியமான இளம் மனிதன் தன்னைத் தானே கிறிஸ்துவுக்கென அளிக்க விரும்பவில்லை, ஆகவே அவன் புறப்பட்டுச் சென்று விட்டான். பிறகு நாம் பார்ப்பது என்னவென்றால் அவன் தானே..... அவன் மிகவுமாக செழித்தோங்கினான், அவனுடைய களஞ்சியங்கள் மிகவுமாக நிரம்பி வழிந்து, “ஆத்துமாவே உன் இளைப்பாறுதலுக்குச் செல்” என்று அவன் கூறும்படிக்கு ஆயிற்று. ஓ அவன் எல்லாவற்றிலும் செழித்தோங்கினான். அவனுக்கு மிகவுமாக இருந்தபடியால் அவனுக்கு தேவை என்பதே இல்லாதிருந்தது.

70. ஆனால் ஏதோ ஒன்று நடந்தது. அடுத்த முறை நாம் அவனைக் காண்கையில் அவன் நரகத்தில் தன்னுடைய கண்களை ஏறெடுத்துப் பார்த்து அங்கே தூரத்திலே

ஆபிரகாமின் மடியிலே அமர்ந்திருந்த அந்த தரித்திரனைக் காண்கின்றான். ஏன் அவ்வாறு ஆனது என்றால் அவன் எல்லாவற்றையும் விட்டு விட்டு கர்த்தராகிய இயேசுவை பின்பற்ற அவனுக்கு விருப்பமில்லாதிருந்தது.

71. அப்பொழுது, இது நிகழ்ந்த போது, அந்த இளம் தலைவன் தான் கொண்டிருந்ததை விட்டு விட்டு இயேசுவைப் பின்பற்ற விருப்ப மில்லாதிருந்த காரியமானது நிகழ்ந்த போது பேதுருவின் மனதில் இவ்விதமான ஒரு எண்ணம் உதித்திருக்கும். அந்த கருத்துக் குறிப்பை அவன் தான் கூறினான் அல்லது கேள்வியைக் கேட்டான், எழுப்பினான் என்று நான் நம்புகிறேன். அப்போது அவன், "பாருங்கள், உம்மைப் பின்பற்றுவதற்காக நாங்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டோமே. நாங்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டோமே. நாங்கள் என்ன செய்தோம் என்று பாருங்கள். எங்கள் வீடுகளை விட்டோம். எங்கள் குடும்பங் களை விட்டு விட்டோம். எங்கள் நிலங்களை

விட்டோம். உம்மைப் பின்பற்றும்படிக்கு எங்களிடம் இருந்த எல்லாவற்றையும் விட்டு விட்டோம்" என்று கூறினான்.

72. அந்த கருத்தானது அவனுடைய மனதில் உதிக்க ஆரம்பித்தது. ஒருக்கால் கிறிஸ்து செய்த காரியங்கள், இன்னும் பிறவற்றை அவன் கவனித்துக் கொண்டேயிருந் ததினால் அவன் மிகவுமாக மெய்மறந்து போய், அவனாலே .... அவன் தன்னுடைய வீட்டை விட்டு வந்து விட்டான் என்று அவனுக்குத் தோன்றவே இல்லை. அவன் தன்னுடைய குடும்பத்தை விட்டான். அவன் தன்னுடைய தகப்பனை, தாயை விட்டான். இயேசுவை பின்பற்றும்படிக்கு தான் கொண்டிருந்த எல்லா வற்றையும் விட்டு விட்டிருந்தான்.

73. ஆனால் தேவனுக்கு சரியாக அது தான் தேவையாயிருக்கிறது; எல்லாவற்றையும் விட்டு விட்டு அவரைப் பின்பற்ற வேண்டும். அது தேவனுடைய தேவைப்படுகின்ற ஒன்றா கும். நாமும் கூட அதைச்செய்தாக வேண்டி

யவர்களாக இருக்கின்றோம். சில சமயங்களில் நம்முடைய எண்ணங்களையே விட்டுவிட வேண்டியவர்களாக இருக்கின்றோம். தேவனுடைய வார்த்தைக்கு முரணாக எந்த ஒரு காரியத்தைக் குறித்ததான நம்முடைய எண்ணங்கள் இருக்குமானால் நாம் நம்முடைய சொந்த எண்ணங்களை விட்டுவிட்டு அவரைப் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கின்றோம். அவரை நாம் பின்பற்றத்தக்கதாக நமக்கு இருக்கின்ற ஒரே வழியானது அவருடைய வார்த்தையைப் பின்பற்றி அதற்குக் கீழ்ப்படி வதே. ஆகவே தேவனுடைய வேண்டுகோள் மற்றும் தேவனுக்குத் தேவையாயிருப்பது என்ன வென்றால் எல்லாவற்றையும் நாம் விட்டு விட்டு அவரைப் பின்பற்றுவதாகும்.

அந்த ஐசுவரியவானுக்கு அந்தவிதமாக தான் பெரிய அளவில் அடக்கம் நடத்தினார்கள். ஆனால் அவன் பாதாளத்தில் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தான். பாருங்கள்? ஒரு பிரம்மாண்டமான அடக்கத்தைக் குறித்து ஒன்றுமே இல்லை. அது எந்த ஒரு வித்தியாசத்தையும் உண்டாக்காது.

---

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

**செய்தி: 63-01-15 கடைசி காலத்திற்கென்று தேவனால் அருளப்பட்ட வழியை ஏற்றுக் கொள்ளுதல்**

---

224. மோசே தன் ஊழியத்தை உண்மையுள்ளவனாக செய்தான். பிறகு அவனுக்கு வயதான போது, நூற்று இருபது வருடங்கள் தேவனுடன் உண்மையுள்ளவனாக நடந்தான். நாற்பது வருடங்களாக வனாந்தரத்தில் தேசங்களாலும், மக்களாலும் வந்த எல்லாவிதமான உபத்திரவங்களையும் தொடர்ந்து சகித்து நின்றான். பிறகு மரிக்கும் இடத்திற்கு வந்தான். மரிக்க அவனுக்கு ஒரு இடம் தேவையாயிருந்தது. தேவன் அவனுக்கு கன்மலையின் மேல் ஒரு இடத்தை அருளினார்.

225. ஓ தேவனே, நானும் கூட அங்கே கன்மலையின் மேலே மரிக்கட்டும். அந்த கன்மலை கிறிஸ்துவே என்று உங்களுக்கு தெரியும். மோசே மரிக்க தேவன் ஒரு இடத்தை அளித்தார். அங்கே மாத்திரம் தான் நான்

மரிக்க விரும்புகிறேன். கிறிஸ்துவுக்குள்ளாக நான் மரிப்பேனாக.

226. அவன் மரித்த பிறகு, அவனுடைய சரீரம் அங்கே இருந்தது. அவனுடைய சரீரத்தை சுமக்க பணியாள் தேவைப்பட்டது. ஆகவே தேவனுக்கு அவன் சரீரத்தை சுமக்கும் பணியாளர்களாக தூதர்களை அளித்தார். அவன் எங்கே செல்லவிருக்கின்றானோ அந்த இடத்திற்கு அவர்கள் மாத்திரமே அவனை எடுத்துச் செல்ல முடியும். ஆமென். தேவன் சுமக்கும் பணியாளர்களை அளித்தார். அது சரியே.

227. பரிசுத்த ஆவியின் பேரிலும், வாக்குத் தத்தமாகிய அந்த வார்த்தையின் பேரிலும் நான் சார்ந்திருக்கிறேன். உங்களை ஒரு பெரிய அளவிலான அடக்க நிகழ்வில் கொண்டு செல்ல அல்ல. அந்த ஐசுவரியவானுக்கு அந்தவிதமாக தான் பெரிய அளவில் அடக்கம் நடத்தினார்கள். ஆனால் அவன் பாதாளத்தில்

தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தான். பாருங்கள்? ஒரு பிரம்மாண்டமான அடக்கத்தைக் குறித்து ஒன்றுமே இல்லை. அது எந்த ஒரு வித்தியாசத்தையும் உண்டாக்காது. நான் தேவனால் அருளப்பட்டுள்ள வழியையே எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்.

"தாம் வருகையில் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களை தம்முடனே தேவன் கொண்டு வருவார்." - அது தான் உண்டாக்கப்பட்டிருக்கின்ற வழியாகும். தம்முடைய உத்தமமான தீர்க்கதரிசி மரிக்கும்படிக்கு தேவன் ஒரு இடத்தை ஆயத்தப்படுத்தினார்.

*Only believe, Only believe*
*All things are possible,*
*Only believe.*



**www.thefinish.in**